அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில்

அம்பேத்கர், பெரியார் ஈ.வெ.ரா., நேரு பெயர்கள் நீக்கம்

திமுக கண்டனம்

சென்னை, ஆக.29: தமிழக அரசின் கொள்கை விளக்கக் குறிப்பில் பெரியார் ஈ.வெ.ரா., அம்பேத்கர், ஜவாஹர்லால் நேரு ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டதற்கு திமுக கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து திமுக சட்டத்துறை இணைச் செயலர் இ.பரந்தாமன் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

மானியகோரிக்கைகளின்போது துறையின் அமைச்சர்களால் சட்டப்பேரவையில் வைக்கப்படும் முக்கிய ஆவணம் கொள்கை விளக்கக் குறிப்புகள். ஒவ்வொரு துறை மானிய கோரிக்கை விவாதம் தொடங்கும் முன்பு துறை அமைச்சர்கள், கொள்கை விளக்கக் குறிப்பை படித்ததாக அவை நடவடிக்கை குறிப்பில் பதிவு செய்து கொள்ளும்படி சொல்வது வழக்கம். அதன்படி அவை நடவடிக்கை குறிப்பிலும் பதிவு செய்யப்படும்.

சட்டப்பேரவையில் அமைச்சர் சம்பத்குமார் அவர்கள் படித்த பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில், 'இடஒதுக்கீடு' என்ற பத்தியில் பெரியார் ஈ.வெ.ரா., அம்பேத்கர், ஜவாஹர்லால் நேரு ஆகியோரின் பெயர்களை திட்டமிட்டே நீக்கியிருக்கிறார்கள்.

திமுக ஆட்சியில் கடந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், பேரவையில் தாக்கல் செய்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடஒதுக்கீடு பற்றி குறிப்பிடும் போது, '1951-இல் இட ஒதுக்கீடு தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. இதனை எதிர்த்து பெரியார் ஈ.வெ.ரா. தமிழ்நாட்டில் வழிநடத்திய எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட காரணமாக அமைந்தது. பிரதமர் ஜவாஹர்லால் நேரு, சட்ட அமைச்சர் அம்பேத்கர் ஆகியோர் முன்னெடுத்து இந்த முதல்அரசமைப்புச் சட்டத் திருத்தத்துக்கு வழி வகுத்தனர்' என குறிப்பிட்டிருந்தார்.

இந்த முக்கியமான பகுதியை தவெக அரசு முற்றிலும் நீக்கிவிட்டது. கடந்த ஆண்டு மட்டுமல்ல, அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் இதே வாசகத்தை கொள்கை விளக்கக் குறிப்பில் திமுக அரசு குறிப்பிட்டிருந்தது.

மேலும், இடஒதுக்கீட்டு வரலாற்றையும் சுருக்கிவிட்டது தவெக அரசு. நீதிக்கட்சி குறித்த குறிப்புகள், வகுப்புவாரிய பிரதிநிதித்துவ அரசாணை, பெரியார் ஈ.வெ.ரா-இன் போராட்டங்கள், இடஒதுக்கீடு கொள்கை, இடஒதுக்கீடு வரலாறு, மண்டல் கமிஷன், மத்திய அரசுப் பணி மற்றும் கல்விநிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு பற்றியெல்லாம் தற்போதைய கொள்கை விளக்கக் குறிப்பு ஆவணத்தில் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டிருப்பது வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது எனத் தெரிவித்துள்ளார் அவர்.

பெயர்கள் விடுபட்டதற்கு பொறுப்பேற்கிறேன்

அமைச்சர் வே.சம்பத்குமார்

கோவை, ஆக.29: சட்டப்பேரவையில் படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் அம்பேத்கர், பெரியார் ஈவெரா பெயர்கள் விடுபட்டதற்கு நானே பொறுப்பேற்கிறேன் என்று பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் வே.சம்பத்குமார் சனிக்கிழமை தெரிவித்தார்.

கோவையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீட்டுதாரர்களுக்கு, வீட்டுமனை பட்டாக்கள் வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர் வே.சம்பத்குமார் பங்கேற்று பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சட்டப்பேரவையில் படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் அம்பேத்கர், பெரியார் ஈவெரா, ஜவாஹர்லால் நேரு ஆகியோரின் பெயர்கள் விடுபட்டதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளதை அறிந்தேன். அம்பேத்கர், பெரியார் ஈவெரா ஆகியோர் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைத் தலைவர்கள். அவர்களுடைய வழிகாட்டுதலில்தான் எங்களுடைய செயல்பாடுகள் உள்ளன. அவர்கள் பெயர்கள் விடுபட்டதற்கு தார்மிக பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன். அதை மறுப்பிரசுரம் செய்து வழங்கக்கூடிய பணி நடந்து கொண்டிருக்கிறது. வரலாற்றில் மக்களுக்காக உழைத்த தலைவர்களை என்றும் நாங்கள் மறக்க மாட்டோம் என்றார்.

தவெக எம்எல்ஏ.வுக்கு அதிமுக கண்டனம்

சென்னை, ஆக. 29: ஜல்லிக்கட்டு விளையாட்டு குறித்த சரியான புரிதலின்றி, தவெக எம்எல்ஏ கருத்து தெரிவித்திருப்பது சரியல்ல என்று அதிமுக தலைமைக் கழகம் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கட்சியின் தலைமைக் கழகம் வெளியிட்ட அறிக்கை:

தமிழரின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு குறித்து சட்டப்பேரவையில் தவெகவை சேர்ந்த சோழவந்தான் சட்டப்பேரவை உறுப்பினர் கருப்பையா தவறான கருத்தைத் தெரிவித்திருப்பது கண்டனத்துக்குரியது.

ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் அவரது தொகுதிக்குள் உள்ளது. இந்நிலையில் அவர் ஜல்லிக்கட்டு குறித்து தவறான நோக்கில் பேசியிருப்பது அதிர்ச்சியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துவதாக உள்ளது. சங்க காலம் தொட்டே தமிழர்களுக்கும் மாடுகளுக்கும் உள்ள உறவை பறைசாற்றும் வகையிலே இந்த ஏறு தழுவுதல் உள்ளது. ஆகவே அதைப் பற்றிய புரிதலின்றியா, சட்டப்பேரவை உறுப்பினர் இருப்பார் என்றும் கேள்வி எழுகிறது.

மாணவர்கள், இளைஞர்கள் தன்னெழுச்சியாக திரண்டு நடத்திய போராட்டத்தின் விளைவாக அன்றைய அதிமுக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி பெற்ற, ஜல்லிக்கட்டு உரிமையைக் கீழ்த்தரமான வகையிலான சட்டப்பேரவை உறுப்பினரின் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து ஏன் நீக்கப்படவில்லை?

ஜல்லிக்கட்டுக்கு தடை கொண்டுவர நினைத்து தற்போதைய அரசு பேசவைத்துள்ளதா என்ற சந்தேகமும் மக்களிடையே எழுந்துள்ளது. தவெக எம்எல்ஏ பேசியதற்காக முதல்வர் விஜய் மன்னிப்புக் கோரவேண்டும். ஜல்லிக்கட்டு குறித்த அரசின் நிலைப்பாட்டை சட்டப்பேரவையில் அறிவிக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டை பொழுதுபோக்காகக் கருதக் கூடாது

அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார்

மதுரை, ஆக. 29: ஜல்லிக்கட்டு விளையாட்டு தமிழர்களின் உணர்வு ரீதியானது. இதை அரங்கத்துக்குள் நடைபெறும் பொழுதுபோக்காகக் கருதக் கூடாது என மாநில எரிசக்தி, சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் தெரிவித்தார்.

மதுரையில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

ஜல்லிக்கட்டு விளையாட்டை தமிழர்கள் தங்கள் பெருமையாகக் கருதுகின்றனர். இந்தப் போட்டி தங்கள் கிராமத்தில் நடைபெற வேண்டும் என்றே தொடர்புடைய கிராம மக்கள் விரும்புகின்றனர். மதுரை அலங்காநல்லூர் அருகே அமைந்துள்ள ஜல்லிக்கட்டு அரங்கம் மக்கள் விருப்பத்தின்பேரில் அமைந்ததல்ல. இது முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பெயருக்காக அமைக்கப்பட்டதாகும்.

ஜல்லிக்கட்டு தமிழர்களின் உணர்வு ரீதியானது. இதை ஓர் அரங்கத்துக்குள் நடைபெறும் பொழுதுபோக்காகக் கருதக் கூடாது.

இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில்தான், இளைஞர்களை தவறாக வழி நடத்தி ஓர் அரங்கத்துக்குள் அடைத்து போட்டிகளை நடத்தக் கூடாது என சோழவந்தான் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கருப்பையா பேரவையில் தெரிவித்தார். இதனிடையே, அவரது ஒலி பெருக்கியின் தொடர்பு துண்டிக்கப்பட்டதால் அவர் தனது கருத்தை முழுமையாகச் சொல்ல இயலாத நிலை ஏற்பட்டுவிட்டது.

தமிழகத்தில் நிதி மோசடி குறித்த புகார்கள் தொடர்ந்து வெளியாகின்றன.

இந்த வகையான மோசடிகளைத் தடுக்க உறுதியான சட்டமும், நடவடிக்கைகளும் தேவை. இதுதொடர்பாக விரைவில் ஆலோசனை நடத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

100 நாள் திட்ட பெண் தொழிலாளிக்கு ரூ. பல லட்சம் ஜிஎஸ்டி நிலுவை நோட்டீஸ்

வேலூர், ஆக. 29: பான் கார்டை முறைகேடாகப் பயன்படுத்தி திருச்சியைச் சேர்ந்த நபர்கள் பல லட்சம் ரூபாய் வரி ஏய்ப்பு செய்துள்ளதால், வேலூரைச் சேர்ந்த 100 நாள் வேலைத் திட்டப் பெண் தொழிலாளிக்கு ஜிஎஸ்டி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்டக் காவல் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டம், மாச்சனூர் பகுதியைச் சேர்ந்த பெண் கூலித் தொழிலாளி சனிக்கிழமை அளித்த புகார் மனு:

மாச்சனூர் கிராமத்தில் வசித்து வரும் நான், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தினக்கூலியாக வேலைக்குச் சென்று வருகிறேன். எனது கணவர் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 2 குழந்தைகளுடன் குடும்பத்தை மிகவும் சிரமத்துக்கிடையே நடத்தி வருகிறேன்.

இந்நிலையில், சரக்கு மற்றும் சேவைவரி (ஜிஎஸ்டி) அலுவலகத்திலிருந்து எனக்கு நோட்டீஸ் வந்தது. அதில், பல லட்சம் ரூபாய் ஜிஎஸ்டி நிலுவை வைத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்து விசாரித்த போது, திருச்சியைச் சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் எனது பான் கார்டை முறைகேடாகப் பயன்படுத்தி 'லட்சுமி பழைய இரும்பு வியாபாரம்' என்ற பெயரில் தொழில் செய்து வந்ததும், நடப்பாண்டில் அவர்கள் பல லட்சம் ரூபாய்க்கு ஜிஎஸ்டி கட்டாமல் ஏமாற்றியதும் தெரியவந்தது.

இதனிடையே, எங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலர் என்னை கைப்பேசியில் தொடர்புகொண்டு, எனக்கு வழங்கப்பட்டு வந்த மகளிர் உரிமைத் தொகை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இது குறித்து கோட்டாட்சியர் அலுவலகத்துக்குச் சென்று கேட்டபோது, பல லட்சம் ரூபாய் ஜிஎஸ்டி நிலுவை நோட்டீஸ் வந்துள்ளதால் உரிமைத் தொகை நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக வேலூர் ஜிஎஸ்டி அலுவலகத்தையும், காவல் துறையையும் அணுகுமாறும் அறிவுறுத்தினர்.

அன்றாடக் குடும்பச் செலவுக்கே திண்டாடி வரும் நிலையில், மோசடி நபர்களால் மகளிர் உரிமைத் தொகையும் நிறுத்தப்பட்டிருப்பது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, எனது பான் கார்டை முறைகேடாகப் பயன்படுத்திய திருச்சியைச் சேர்ந்த மோசடி நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், எனது வங்கிக் கணக்கை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து, நிறுத்தப்பட்ட மகளிர் உரிமைத் தொகை மீண்டும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தின பாதுகாப்பில் கார் மோதி காயமடைந்த உதவி ஆய்வாளர் உயிரிழப்பு

சென்னை, ஆக. 29: சென்னை மெரீனாவில் சுதந்திர தினத்தன்று கார் மோதி காயமடைந்த காவல் உதவி ஆய்வாளர் சனிக்கிழமை உயிரிழந்தார்.

ஆயிரம்விளக்குகொச்சின்ஹவுஸ் காவலர் குடியிருப்பைச் சேர்ந்தவர் தி.சீனிவாசன் (54). இவர், திருவல்லிக்கேணி போக்குவரத்து அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்புக் காவல் உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வந்தார். சீனிவாசனுக்கு ரேணுகாதேவி என்ற மனைவியும், சூர்யா என்ற மகனும் உள்ளனர்.

சுதந்திர தினத்தையொட்டி, கடந்த 15-ஆம் தேதி மெரீனா கடற்கரையில் கண்ணகி சிலை அருகே சீனிவாசன், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது, அங்கு வேகமாக வந்த ஒரு கார், சாலையோரம் நின்று கொண்டிருந்த சீனிவாசன் மீது மோதியது. இதில் பலத்த காயமடைந்த சீனிவாசன் மீட்கப்பட்டு, ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை பெற்று வந்த சீனிவாசன் சனிக்கிழமை உயிரிழந்தார்.

இது தொடர்பாக அண்ணா சதுக்கம் போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பணியில் முறைகேடு

ஆவின் துணை பொது மேலாளர் பணியிடை நீக்கம்

சேலம், ஆக. 29: சேலம் ஆவின் பால் ஒன்றியத்தில் துணைப் பொது மேலாளராகப் பணியாற்றி வருபவர் சாரதா. இவரது அறையில் 40 லிட்டர் நெய் பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும், ஆவின் பொருள்களை மறைத்துவைத்து, கள்ளச் சந்தையில் அவர் விற்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

அதன் அடிப்படையில் அதிகாரிகள் அவர் அறையில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, அவரது அறையில் நெய் பாட்டில்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து ஆவின் அதிகாரிகள் விசாரணை நடத்திவந்தனர். விசாரணையின் அடிப்படையில் துணைப் பொது மேலாளர் சாரதாவை பணியிடை நீக்கம் செய்து ஆவின் நிர்வாக இயக்குநர் சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

NAME CHANGE

I, **Sellam Vijayakumar**, wife of Vijayakumar V, resident of 116/1, Senthamil Nagar, Velappa goundan Valasu, Villarasampatti-Post, Erode -638107, Tamil Nadu have changed my name from **SELLAM VIJAYAKUMAR** to **SELLAM V** vide Affidavit dated 01-07-2025 at Erode.

Sellam Vijayakumar

Canara Bank
Syndicate
தலைமை அலுவலகம் : பெங்களூரு

ARM கிளை, திருச்சி
முதல் தளம், மண்டல அலுவலகம், முத்தையா டவர்ஸ், வில்லியம்ஸ் ரோடு, திருச்சி - 620001. Ph : 0431-2416067
E-mail: cb6818@canarabank.com

கையகப்படுத்தியதற்கான அறிவிப்பு
[Section 13(4)]

கடனீட்டு சொத்துக்களை ஒரக்கமாக்குதல், நிதி சொத்துக்கள் சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து பேரிலான உரிமை சட்டம் 2002-ன் (2002-ன் சட்டம் 54) (இனிமேல் "சட்டம்" என்று குறிப்பிடப்படுகிறது) பிரிவு 13 (12) படியும் மற்றும் சொத்து மீதான கடனீட்டு உரிமையை அமலாக்கும் விதி 3-ன் படியும் கீழே கையொப்பமிட்டுள்ள **கனரா வங்கியின்** அதிகாரம் பெற்ற அலுவலரால் **17-04-2026** தேதியிட்ட கேட்பு அறிவிப்பில் குறிப்பிட்ட கடன் தொகையான **ரூ.18,31,49,432.34 (ரூபாய் பதினெட்டு கோடியே முப்பத்தொரு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து நானூற்று முப்பத்து இரண்டு மற்றும் முப்பத்து நான்கு பைசா மட்டும்)** அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டுமென்று கடன்பெற்றவரான **PARTIES TO M/s SN ASSOCIATES LOANS: 1. M/s SN அசோசியேட்ஸ் (கடன்தாரர்),** (உரிமையாளர் : M.நித்தா), கடன்.7/25, வயகாடு, குடிதெரு, கண்ணூர்பட்டி, நாமக்கல் - 637014. **2. திரு.நி. M.நித்தா (உரிமையாளர் & அடமானதாரர்),** த/பெ. R.மூர்த்தி, கடன்.13, மேற்கு தெரு, இடிகரை, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் - 641022. **3. திரு. K.செங்கோட்டுவேல் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. கருப்பண்ணகவுண்டர், கடன்.7/25, வயகாடு, குடிதெரு, கண்ணூர்பட்டி, நாமக்கல் - 637014. **4. திரு. V.N.ஜெயச்சந்திரன் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. V.R.நல்லசாமி, கடன்.156, பெரியகாட்டு தோட்டம், (கோவில் எதிரில்) வில்லரசம்பட்டி, ஈரோடு - 638107. **5. திரு. N.சதீஷ்குமார் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. V.R.நல்லசாமி, கடன்.156, பெரியகாட்டு தோட்டம், (கோவில் எதிரில்) வில்லரசம்பட்டி, ஈரோடு - 638107. **6. திருமதி. N.சரஸ்வதி (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. V.R.நல்லசாமி, கடன்.156, பெரியகாட்டு தோட்டம், (கோவில் எதிரில்) வில்லரசம்பட்டி, ஈரோடு - 638107. **7. திரு. D.சங்கர் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. PK.தெய்வசிகாமணி, கடன்.4/27, மேகாடு தோட்டம், குமாரசாமி நகர், குமாரபாளையம் மெயின் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் - 638008. **PARTIES TO M/s SN TRADERS LOAN: 1. M/s SN டிரேடர்ஸ் (கடன்தாரர்),** (உரிமையாளர் : K.செங்கோட்டுவேல்), கடன்.7/25, வயகாடு, குடிதெரு, கண்ணூர்பட்டி, நாமக்கல் - 637014. **2. திரு. K.செங்கோட்டுவேல் (உரிமையாளர் & அடமானதாரர்),** த/பெ. கருப்பண்ணகவுண்டர், கடன்.7/25, வயகாடு, குடிதெரு, கண்ணூர்பட்டி, நாமக்கல் - 637014. **3. திரு. V.N.ஜெயச்சந்திரன் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. V.R.நல்லசாமி, கடன்.156, பெரியகாட்டு தோட்டம், (கோவில் எதிரில்) வில்லரசம்பட்டி, ஈரோடு - 638107. **4. திரு. N.சதீஷ் குமார் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. V.R.நல்லசாமி, கடன்.156, பெரியகாட்டு தோட்டம், (கோவில் எதிரில்) வில்லரசம்பட்டி, ஈரோடு - 638107. **5. திருமதி. N.சரஸ்வதி (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. V.R.நல்லசாமி, கடன்.156, பெரியகாட்டு தோட்டம், (கோவில் எதிரில்) வில்லரசம்பட்டி, ஈரோடு - 638107. **PARTIES TO M/s NS TEX LOANS: 1. M/s NS டெக்ஸ் (கடன்தாரர்),** (உரிமையாளர் : M.நித்தா), கடன்.13, மேற்கு தேர் வீதி, இடிகரை, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் - 641002. **2. திருமதி. M.நித்தா (உரிமையாளர் & அடமானதாரர்),** த/பெ. R.மூர்த்தி, கடன்.13, மேற்கு தெரு, இடிகரை, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் - 641022. **3. திரு. D.சங்கர் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. PK.தெய்வசிகாமணி, கடன்.4/27, மேகாடு தோட்டம், குமாரசாமி நகர், குமாரபாளையம் மெயின் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் - 638008. **4. திரு. K.செங்கோட்டுவேல் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. கருப்பண்ணகவுண்டர், கடன்.7/25, வயகாடு, குடிதெரு, கண்ணூர்பட்டி, நாமக்கல் - 637014. **PARTIES TO HL AVAILED BY SRI. SENGOTTUVEL K: 1. திரு. K.செங்கோட்டுவேல் (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ. கருப்பண்ணகவுண்டர், கடன்.7/25, வயகாடு, குடிதெரு, கண்ணூர்பட்டி, நாமக்கல் - 637014. **2. திருமதி. M.நித்தா (இணை-கடன்தாரர்),** த/பெ. R.மூர்த்தி, கடன்.13, மேற்கு தெரு, இடிகரை, கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் - 641022 ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தத் தவறியதால், குறிப்பாக கடன்தாரருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதி முறைகளின்படியும் 8 & 9வது விதியின்படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **27-08-2026** அன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் ஏஎம் உடையமாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன்தாரர் அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வியவகாரங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **கனரா வங்கிக்கு** சேரவேண்டிய கடன்தொகையான **24-08-2026** அன்றுள்ளபடி **ரூ.18,32,80,598.38 (ரூபாய் பதினெட்டு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து எண்பதாயிரத்து நானூற்று தொண்ணூற்று எட்டு மற்றும் முப்பத்து எட்டு பைசா மட்டும்)** மற்றும் பின்னிட்ட வட்டி சேர்த்து இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டுவரப்படுவது யாதெனில் கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்கான காலஅவகாசம் சர்பாஸி சட்டம் பிரிவு 13(8)க்கு உட்பட்டதாகும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

அசையாச் சொத்து விபரம்

சொத்து -I : (M/s. SN அசோசியேட்ஸ், M/s. NS டெக்ஸ் & திரு. K.செங்கோட்டுவேல் ஆகியோரின் வீட்டு கடனுக்காக வழங்கப்பட்ட பொதுப் பிணையம்)

இச்சொத்தின் நிலம் மற்றும் குடியிருப்பு வீட்டு கட்டிடமானது **திரு. K.செங்கோட்டுவேல், த/பெ. கருப்பண்ணகவுண்டர்** பெயரில் உள்ளது. **அமிட்டம்-1 :** இச்சொத்தானது கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் துணைப் பதிவு அலுவலகம், இடிகரை கிராமம், மேற்கு ரத தெரு, பழைய நத்தம் சர்வே.504/1A1, புதிய நத்தம் சர்வே.504/1A1A, தற்போதைய நத்தம் சர்வே.941/4, பட்டா எண்.236, கடன்.42-ல் அமைந்துள்ளது. நிலத்தின் பரப்பளவு 988 ச.அடி. **எல்லைகள் :** ராமச்சந்தர் மற்றும் மற்றவர்களின் நிலத்திற்கு **கிழக்கு,** குப்பண்ண கவுண்டர் மற்றும் மற்றவர்களின் நிலத்திற்கு **மேற்கு,** இரண்டாவது தரக்கு சொத்திற்கு **தெற்கு,** ராமச்சந்திரன் வீட்டிற்கு **வடக்கு.** மேற்குறிப்பிட்ட எல்லைக்குண்டான நிலத்தின் அளவுகள் கிழமேல் வடக்கு பக்கம் 38 அடி, கிழமேல் தெற்கு பக்கம் 38 அடி, தென்வடல் கிழக்கு பக்கம் 26 அடி, தென்வடல் மேற்கு பக்கம் 26 அடி. நிலத்தின் மொத்தப் பரப்பளவு 988 ச.அடி. **அமிட்டம்-2 :** இச்சொத்தானது கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் துணைப் பதிவு அலுவலகம், இடிகரை கிராமம், மேற்கு ரத தெரு, பழைய நத்தம் சர்வே.504/1A1, புதிய நத்தம் சர்வே.504/1A1A, தற்போதைய நத்தம் சர்வே.941/4, பட்டா எண்.236, கடன்.42-ல் அமைந்துள்ளது. நிலத்தின் பரப்பளவு 950 ச.அடி. **எல்லைகள் :** ராமச்சந்தர் மற்றும் மற்றவர்களின் நிலத்திற்கு **கிழக்கு,** குப்பண்ண கவுண்டர் மற்றும் மற்றவர்களின் நிலத்திற்கு **மேற்கு,** கிழமேல் ரோட்டிற்கு **தெற்கு,** முதல் தரக்கு சொத்திற்கு **வடக்கு.** மேற்குறிப்பிட்ட எல்லைக்குண்டான நிலத்தின் அளவுகள் கிழமேல் வடக்கு பக்கம் 24 அடி, கிழமேல் தெற்கு பக்கம் 24 அடி, தென்வடல் கிழக்கு பக்கம் 40 அடி, தென்வடல் மேற்கு பக்கம் 40 அடி. நிலத்தின் மொத்தப் பரப்பளவு 960 ச.அடி. **அமிட்டம்-3 :** இச்சொத்தானது கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் துணைப் பதிவு அலுவலகம், இடிகரை கிராமம், மேற்கு ரத தெரு, பழைய நத்தம் சர்வே.504/1A1, புதிய நத்தம் சர்வே.504/1A1A, தற்போதைய நத்தம் சர்வே.941/4, பட்டா எண்.236, கடன்.42-ல் அமைந்துள்ளது. நிலத்தின் பரப்பளவு 96 ச.அடி (தென்வடல் மேற்கு பக்கம்). **எல்லைகள் :** காகமலை நிலத்திற்கு **கிழக்கு,** V.K.தங்கவேல் நிலத்திற்கு **மேற்கு,** கிழமேல் ரோட்டிற்கு **தெற்கு,** பழனிசாமியின் வீடு மற்றும் மனைக்கு **வடக்கு.** மேற்குறிப்பிட்ட எல்லைக்குண்டான நிலத்தின் அளவுகள் கிழமேல் வடக்கு பக்கம் 11/2 அடி, கிழமேல் தெற்கு பக்கம் 11/2 அடி, தென்வடல் கிழக்கு பக்கம் 64 அடி, தென்வடல் மேற்கு பக்கம் 64 அடி. நிலத்தின் மொத்தப் பரப்பளவு 96 ச.அடி (தென்வடல் மேற்கு பக்கம்). **அமிட்டம் 1 to III-ன் மொத்தப் பரப்பளவு 2044 ச.அடிக்கு சமமான 189.89 ச.மீட்டர் நிலம்.** கடன்.42, மேற்கு ரத தெரு முகவரியைக் கொண்ட குடியிருப்பு கட்டிடம் அமைந்துள்ள இச்சொத்து, E.B.S. எண்.122-001-399 கொண்ட மின் மீட்டர், அதற்கான வைப்புத் தொகை, பொதுவான வழக்கமான உரிமைகள், காம்பவுண்ட் சுவர், தண்ணீர் வசதிகள், வடிகால் வசதிகள், நடைபாதை மற்றும் அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கியதாகும்.

சொத்து - II : (M/s. SN அசோசியேட்ஸ் & M/s. NS டெக்ஸ் நிறுவனங்களுக்காக வழங்கப்பட்ட பொதுப் பிணையம்)

இச்சொத்தின் நிலம் மற்றும் R.C.C. குடோன் கட்டிடமானது **திருமதி. M.நித்தா, த/பெ. மூர்த்தி & க/பெ. K.செங்கோட்டுவேல்** பெயரில் உள்ளது. **அமிட்டம்-1 :** இச்சொத்தானது திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் ஜமின்ட் I துணைப் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலுக்கா, திருப்பூர் டவுன், 3வது வார்டு, அவிநாசி ரோடு, தொட்டிபாளையம் கிராமம், S.F.No.107/2, T.S.No.445/1, பிளாக் எண்.11, வார்டு எண்.1, தற்போது திருப்பூர் வடக்கு தாலுக்கா, தொட்டிபாளையம், வார்டு எண்.H, பிளாக் எண்.46, T.S.No.7 வேலுவீட் திட்டத்தின்படி மனை எண்.11 ன் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது. **எல்லைகள்** மற்றும் அளவீடுகள் பின்வருமாறு: மனை எண்.11 ன் நடுப்பகுதிக்கு (அட்டவணை-2 சொத்து) **வடக்கு,** R.அம்மாசி கவுண்டர் மற்றும் வள்ளியம்மை கட்டிடங்களுக்கு **தெற்கு,** மனை எண்.10 A பகுதிக்கு **கிழக்கு,** தென்வடல் அவிநாசி ரோட்டிற்கு **மேற்கு.** மேற்கு நிலப்பரப்புக்குள் கிழமேல் வடக்கால 67½ அடி, கிழமேல் தெற்கால 69½ அடி, தென்வடல் மேற்கால 14½ அடி, தென்வடல் கிழக்கால 11 அடி. நிலத்தின் அளவுகள் 875 ச.அடி. **அமிட்டம்-2 :** இச்சொத்தானது திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் ஜமின்ட் I துணைப் பதிவு அலுவலகம், திருப்பூர் தாலுக்கா, திருப்பூர் டவுன், 3வது வார்டு, அவிநாசி ரோடு, தொட்டிபாளையம் கிராமம், S.F.No.107/2, T.S.No.445/1, பிளாக் எண்.11, வார்டு எண்.1, தற்போது திருப்பூர் வடக்கு தாலுக்கா, தொட்டிபாளையம், வார்டு எண்.H, பிளாக் எண்.46, T.S.No.7 வேலுவீட் திட்